படும். இது ஐயப்பனின் தாலாட்டுப்பாட்டு.

### பெருந்தோடு

பெருந்தோடு என்பது சபரிமலை யாத்திரையில் வரும் ஒரு சிற்றாறு. எருமேலியிலிருந்து சுமார் 2 மைல் கிழக்கே உள்ளது. பேட்டைத் துள்ளல் முடித்துப் பெருந்தோட்டுக்குப் போகும் பக்தர்கள் பொரி, கருப்புக் கட்டி ஆகியவற்றை நீரோடையிலுள்ள பாறைகளில் தூவி வழிபடுகின்றனர். சாஸ்தாவின் கணங்களைப் பிரீதி செய்வது இச்சடங்கு என்பர். பக்தர்கள் இங்கு நீராடி, இளைப்பாறிப் பயணம் தொடர்வர்.

### பெருவழிப் பாதையும், சிறுவழிப் பாதையும்

41 நாட்கள் விரதம் இருந்து, நாற்பத்தெட்டு மைல் நடந்து எருமேலி வழிச் செல்லும் பாதை பெருவழிப்பாதை. மூன்று நாள் விரதமும், பம்பை வரை வாகனமும், அங்கிருந்து நடையும் எனச் செல்வது சிறு வழிப்பாதை.

### பேட்டைத் துள்ளல்

எருமேலியில் நிகழ்வது. சபரி யாத்திரையின் விசேஷ அம்சம். கன்னி ஐயப்பன்மார் கலந்து கொள்வது கட்டாயம். மலையாளத்தில் பேட்டை என்பது கடை; துள்ளல் என்பது ஆட்டம். குருசாமியின் வழிகாட்டுதலில் ஐயப்பன்மார் கடை சென்று தேவையான காய்கனி கிழங்குகள் வாங்கித் தொட்டிலில் இட்டுச் சுமந்து வருவர்; வண்ணங்களால் முகத்தை அலங்கரிப்பர்; இலைதழைகள் (பலூன் உட்பட) தலையில் கட்டி துள்ளிக் குதித்து ஆடுவர். மேளதாளத்துடன் ''சுவாமி திந்தகத்தோம்... ஐயப்ப திந்தகத்தோம்'' என ஆடிப்பாடி வாவர் சந்நிதியை வலம் வந்து, பின்பு பேட்டை சாஸ்தா கோயிலில் இருந்து தர்ம சாஸ்தா சந்நிதி வந்து தேங்காய் உடைத்துக் கற்பூரம் ஏற்றி வழிபடுவர். கோஷமும் நடனமும் முக்கியம். மகிஷியைக் கொன்ற உற்சாகம் என்றும், முதன்முதலாக ஐயப்பன் பேட்டை துள்ளி சபரிக்கு நடக்க ஆரம்பித்த இடம் என்றும், சாஸ்தாவுடன் பழங்குடிகள் இணைந்ததின் அடையாளம் என்றும் பேட்டை துள்ளலின் ஐயப்ப உறவினை விளக்குவர்.

காலையில் அம்பலப்புழைக் குழுவினரின் பேட்டைத் துள்ளலும், மாலையில் ஆலங்காடு குழுவினரின் பேட்டை துள்ளலும் நிகழும். முன்னதில் கருடன் வானில் வட்டமிடும்; பின்னதில் வானில் நட்சத்திரம் தோன்றும்.

உடலுணர்வு அவிழ ஆடும் ஆன்மீக உற்சாகமும், 'சாமி என்றகத்து - ஓம்' 'ஐயப்பன் என்றகத்து ஓம்' - எனும் அத்வைத ஸ்பரிசமும் பேட்டை துள்ளலின் ஆன்மீக அம்சமாகும்.

### பேரூர்த்தோடு

எருமேலியில் பேட்டைத்துள்ளல் முடித்துப் பக்தர்கள் வந்து சேருமிடம் பேரூர்த்தோடு. அங்கு ஆற்றின் கரையில் தங்கி, அவலும் மலரும் அர்ச்சித்துக் கூட்டமாகச் சரண மந்திரம் சொல்வர். அங்கு வரும் மலையரையர்களுக்கு, உணவளித்து அவர்களுடன் உரையாடுவர். பின்பு பயணம் தொடரும்.

### பொன்னம்பலமேடு

புலிப்பால் பெறும் பொருட்டுக் கானகம் வந்த மணிகண்டனுக்குச் சிவபெருமான் துணையாக சிவகணங்களை அனுப்பினான். சிவ கணங்களோடு பம்பை ஆற்றின் கரையில் தங்கிய மணிகண்டனைத் தெய்வ அவதாரம் என அறிந்த முனிவர் பலர் அங்கு வந்து போற்றித் துதித்தனர். பம்பை ஆற்றின் கரையிலிருந்து பத்து கல் தொலைவிலுள்ள நீலமலை உச்சியில் அவர்கள் தங்கள் ஆற்றலால் சுவர்ணாலயம் ஒன்று நிறுவினர். அங்கு ஐயப்பனை அழைத்துச் சென்று நவரத்தின சிம்மாசனத்தில் அமர்த்தி வழிபட்டனர். அதுதான் இன்று பொன்னம்பல மேடானது. சிதம்பரம் சிவனுக்குப் பொன்னவை; இங்கு மகனுக்குப் பொன்னம்பலமேடு.

## தோஷங்கள் அகல

ஐயப்ப பக்தர்களின் சனி தோஷம் நீங்க மாளிகைப் புறத்தில் பற கொட்டிப்பாட்டு என்னும் ஒரு வகை வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. பாற்கடல் கடந்த நிகழ்வை அடுத்து, லோகநாதனை மகாவிஷ்ணுவுக்கு சனி தோஷம் பீடித்தது. சிவபெருமான் வேலனாகவும், பார்வதி வேலத்தியாகவும் வந்து பாடி விஷ்ணுவின் சனி தோஷத்தை அகற்றியதாக ஒரு நம்பிக்கை. இதனை நினைவு கூறும் சடங்குதான் பற கொட்டிப்பாட்டு. மணிமண்டபத்தின் முன்புறம் பற கொட்டிப் பாடுவதற்காக பதினைந்திற்கும் மேற்பட்ட வேலன்கள் காத்திருக்கின்றனர். இவர்கள் கேசாதிபாதம் கதை பாடி பக்தர்களின் சனி தோஷத்தை மாற்றுகின்றனர்.

## ம

### மகர ஜோதி

மகர ஜோதிதான் ஐயப்ப தரிசனத்தின் சிகர நிகழ்ச்சி. சபரிமலைப் புனித யாத்திரையில், பொங்கல் திருநாளன்று ஆண்டுதோறும் பல லட்சம் பக்தர்கள் மகர ஜோதியைத் தரிசித்துப் பரவசம் அடைவர். பொன்னம்பல மேட்டில் ஜோதி தெரியும். மகர சங்கிரம நாளில் சபரிமலை சந்நிதானத்தில் சந்தியா காலத்துத் தீபாராதனை நடைபெறும்போது பொன்னம்பல மேட்டில் தேவரும், முனிவரும் தீபாராதனை நடத்துகிறார்கள் என்பது காலங்காலமாக ஐயப்ப பக்தர்கள் கொண்டுள்ள நம்பிக்கை அனுபவம். மலை முகட்டில் சிறிது நேரமே பேரொளி தோன்றி மறையும். இது பக்தர்களுக்குப் பரவச உணர்ச்சி தரும். பக்திப் பெருக்குடன் சரண ஒலி முழங்கும். ''தமஸோ மா ஜ்யோதிர் கமய'' எனும் வேத முழக்கத்தின் காந்தமலைத் தீபாராதனையே மகரஜோதி.

### மகிஷி

மகிஷாசுரன் தங்கை மகிஷி. அண்ணன் இறந்ததற்காகத் தேவர்களைப் பழிவாங்கக் கருதினாள். பிரமனிடம் வரங்கள் பெற்றாள். பதினான்கு உலகங்களும் தன் வசமாதல், தன் மயிர்க் கால்களிலிருந்து தன் போன்ற அரக்கிகள் தோன்றல், ஆணுக்ும் ஆணுக்கும் பிறந்து பன்னிரு ஆண்டுகள் மானுடனாக வாழ்ந்த பிரம்மச்சாரியால் மட்டுமே மரணம் எனும் மூன்று வரங்கள் வழிப் பெற்ற வல்லமையால் பெருங்கொடுமைகள் புரிந்தாள். புலிப் பாலுக்காகப் பம்பை நதிக்கரை வந்த ஐயப்பனிடம் தேவர்கள் மகிஷியை அழித்து தம்மைக் காக்குமாறு வேண்டினர். ஐயப்பன் மகிஷியுடன் பெரும் போர் செய்து, கொம்பினைப்